www.tamilarangam.net

# ஈழபூமி

EELABHOOMI

15 February 1993

THE INTERNATIONAL TAMIL NEWSMAGAZINE

வடக்கைப் பிடிக்கவும்
கிழக்கைக் கிழிக்கவும்
ஸ்ரீனிக்கு அதிகாரம்
கொடுத்தது யார்?

ஐ. நா. வின் உதவியுடன்
ஐரோப்பாவில் உள்ள இலங்கை
அகதிகள் மீண்டும்
திருப்பியனுப்பப்படுவர்?!

## எண்ணியதை எண்ணியபடி...

காயத்திரியின்

புரிந்தும் புரியாத அரசியல் கொலைக்களும்

புரியாமலே இருக்கும் அரச - புலி பேச்சுவார்த்தை






உரித்துப் பாருங்கள் உள்ளே!

ஒரு வெங்காயத்தின் வெங்காயத் தீர்வுகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| Australia | | Germany | 1.00Dm | Norway | 5.50Kr | U.K | .50P |
| Canada | 1.00S | Italy | 1000L | Singapore | 2.50S | U.S.A | 1.00S |
| Denmark | 6.00Kr | India | 5.00Rs | Sri Lanka | 5.00Rs | | |
| Dubai | | Malajsia | 2.50S | Sweden | 5.50SKr | | |
| France | 6.00F | Netherlands | 1.75Fl | Switzerland | 1.00Sf | | |

மாத இதழ்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# THAMOULINEE

## SRI LANKAN & SOUTH INDIAN CUISINE



**128A Uxbridge Road, Hayes**
**Middlesex UB4 0JH**
**Tel: 081 - 561 3723**

***OUTSIDE CATERING AND TAKEAWAY FACILITIES AVAILABLE***

**Thamoulinee Specialities Includes:**
Kothu Rotti, Kothu Pittu, Varities of Hoppers, Masala Dosai, Baked Crab / Squid.

## ★ LUNCH TIME SPECIAL ★

### VEGETARIAN MEAL

Choice of Soft Drink / Glass of Wine

**STARTERS**

Vadai / Onion Bhaji

**MAIN COURSE**

String Hoppers / Pittu / Pullao Rice & Rotti
And **THREE** different dishes of Vegetable curries, Poppadum and Rasam

**DESSERTS & BEVERAGES**

☆ Ice Cream / Lassi
**AND**
☆ Coffee / Tea

Any combinations from above selections will cost:

**Just £3.99**

### NON VEG MEAL

Choice of Soft Drink / Glass of Wine

**STARTERS**

Mutton Roll / Prawn Kebab / Crab Claws

**MAIN COURSE**

String Hoppers / Pittu / Pullao Rice & Rotti
**AND**
Lamb Curry / Chicken Curry / Prawn Curry / Squid Curry
And **TWO** different dishes of Veg Curries

**DESSERTS & BEVERAGES**

☆ Ice Cream / Lassi
**AND**
☆ Coffee / Tea

Any combinations from above selections will cost:

**Just £4.99**

Artwork by JAY DESIGN Tel: 081 - 543 3008

www.tamilarangam.net



# உள்ளே


| | |
|---|---|
| மூன்றாவது சினிமா | 2 |
| எண்ணியதை எண்ணியபடி எழுதுகிறேன் | 6 |
| எமது பார்வையில் | 9 |
| புதிய தீர்வுகள் | 11 |
| குறள் தந்த வழி | 12 |
| கலாநிதிகளும் விரிவுரையாளர்களும் . | 13 |
| அகதிகள் போவது நிச்சயம் | 14 |
| மனிதமும் மருத்துவமும் | 15 |


நூற்தொகுப்பு : ஆசிரியர் குழு

வெளியீடு : ஈழபூமி வெளியீட்டகம்

பதிப்பு : குளோபல் அச்சகம்

ஆசிரியர் குழு:
ச. இராசையா
கோ. காயத்திரி
ச. வா. அருளம்பலம்

நிருபர்கள்:
சி. செல்வதீபம்
ஆர். ஜீவன்
த. அகிலன்

The Eelabhoomi
P.O. Box 214
Tooting
London SW17

**அடுத்த இதழில்**

ஐரோப்பிய நாடுகளில் வசிக்கும் அகதிகள்
நிலை பற்றிய ஆய்வு
இலங்கையில் தணிக்கை செய்யப்பட்ட பல
செய்திகள் இன்னும் சுவையான பல
அம்சங்களுடன் வெளிவருகிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மூன்றாவது சினிமா

## சத்தியஜித் ரே எனும் ஒரு கலைஞன்

- ஜமுனா ராஜேந்திரன்

ஸத்தியஜித்ரே எனும் கலைஞன் பௌதிக ரீதியில் இறந்து விட்டான். கலைஞனாக மனித நாகரீகம் வாழும் தோறும் நின்று நிலைப்பான் அம்மாமனிதன்.

தாயின் தாலாட்டுப் பாடலைக் கேட்டுக் கொண்டு கந்தலில் படுத்துத் தூங்கும் குழந்தை 'சாக்கடையில் நிலாக்கண்டு சிரிக்கும்' அழகைச் சொன்ன கலைஞன் அவன்.

உலக மனிதனின் சந்தோசத்தை, துக்கத்தை, ஆண் பெண்ணுக்கிடையிலான சிக்கல்களை, மனித ஆன்மாவின் அடியாழத்தில் வாழும் அற்புதங்களை இந்திய சினிமா மொழியில் அவனது தாய்பாஷை வங்காள மொழியில் இந்தியனுக்கும் உலகுக்கும் சொன்ன சர்வதேசியக் கலைஞன்.

ஸத்தியஜித்ரே இறப்பதற்கு சில நாட்களுக்கு முன்னர் அவரது வாழ்நாள் முழுதின் சினிமாச் சாதனைகளுக்காக ஆஸ்கார் விருதுக் கமிட்டி ஆஸ்கார் பரிசை அவருக்கு வழங்கி தன்னைக் கௌரவித்துக் கொண்டது.

சார்லி சாப்ளினின் மாதிரியான திரைப்பட மேதைகளின் வரிசையில் ஸத்தியஜித்ரேயை இனங்கண்டது மேற்கத்திய அறிவாளிகள் உலகம். ஜப்பானிய திரைப்பட மேதையின் அகிரா குரசோவாவின் வார்த்தைகளில் ஸத்தியஜித்ரே இருபதாம் நூற்றாண்டின் சினிமாவின் மாமனிதன்.

அவர் வாழ்ந்த நாட்டில் அவரது சமகாலத்தின் மிகச் சிறந்த திரைப்படக் கலைஞர்களால் ஆசானாகக் கருதப்பட்டவர். அவர் மீது கடுமையான விமர்சனங்களைக் கொண்டிருந்தவர்கள் கூட ஒரு முழுமையான கலைஞனாக மனிதாபிமானம் பேணிய கலைஞனாக அவரை மதித்தார்கள்.

உலகின் அனைத்து அற்புதங்களையும் உன்னதங்களையும் ஒதுக்கி வைக்கும் வெகுசன தமிழ்க் கலாச்சாரம் ரே மாதிரிக் கலைஞனை ஒரு பிரச்சனையாகவே கருதவில்லை. ரேயின் படங்களைப் பற்றி ரேயின் மேதமை பற்றி அக்கறையுடன் பேசிய தமிழ்ப் பட இயக்குனர்கள் யாரேனும் இருப்பார்கள் என்பது சந்தேகமே.


இந்தியாவின் வறுமையை சர்வதேசிய சந்தையில் விற்பவர் என்ற விமர்சனம் ஒரு முறை ஆனந்த விகடன், இதயம் பேசுகின்றது மணியனால் முன்வைக்கப்பட்டது. முற்றிலும் அறிவீனமான விமர்சனம் இது.

இந்தியாவின் வறுமை பற்றி, இந்திய வாழ்க்கை முறை பற்றி குறிப்பாக கல்கத்தா நகரத்தின் நெருக்கடியான சேரிகள் பற்றி மேற்கத்தியப் படத் தயாரிப்பாளர்கள் வெளிக்கொணர்ந்த அத்தனை படங்களையும் பற்றி கடுமையான விமர்சனம் கொண்டிருந்தவர் ரே.

இந்திய வாழ்க்கை முறையின் ஆன்மாவை, இந்திய மனிதனின் ஆன்மாவை, ஒருநாளும் மேற்கத்தியர்கள் புரிந்து கொள்ளமுடியாது. புரிந்து கொள்ள முடியாமல் எடுக்கப்பட்ட படங்களே அவை என்பதுவே ரேயின் கருத்து.

இறப்பதற்கு முன்பு கொடுக்கப்பட்ட சில பேட்டிகளில் ஒன்றான லண்டன் இண்டிப்பெண்டன்ற் பத்திரிக்கைப் பேட்டியில் கூட இது பற்றிப் பேசுகிறார் ரே.

வறுமை என்பது பட்டினி என்பதும் வறட்சி என்பது அதைத் தொடர்ந்து வரும் மனித சோகமும்



www.tamilarangam.net



தன்னால் விபரிக்க இயலாது என்று அவர் நம்பினார்.

அவர் வேற்று மொழியில் எடுத்த இருபடங்களில் ஒன்று ஸத்ரஞ்ச் கா கிலாரி (சதுரங்கம்) இந்தி மொழியில் எடுக்கப்பட்ட இந்தப் படம் தனக் கு மனத் திருப்தியைத் தராத ஒரு படம் என்று குறிப்பிடுகின்றார் ரே. பிரிட்டிஸ் ஏகாதிபத்தியவாதிகள் இந்தியாவின் ஆட்சியதிகாரத்தை மெல்ல மெல்ல கைப்பற்றிய விவரத்தை விமர்சனக் கண்ணோட்டத்தோடு சொல்கின்றது இந்தப் படம்.


தன் சம கால இயக்குனர் களான மிருணாள்சென், ஸியாம்பெனிகல், கௌதம் கோஷ், கோவிந்த் நிஹ்லானி போன்றவர்கள் மாதிரி நேரடியான அரசியல் பிரச்சனைகளை எடுத்துக் கொண்டு கோபாவேசமான விமர்சனத்தோடு அரசியலைக் கையாண்டவர் இல்லை ரே.



சத்தியஜித் ரே

சமூக மாற்றத்தின் பிரச்சனைகளை மனித உறவுகளுக்கிடையிலான பிரச்சனைகளினூடே பார்த்தவர் ரே. ஜனாரண்யா, பிரதித்வந்தி, ஜனஸத்ரு கன்ஜன்ஜங்கா போன்ற படங்களில் நக்ஸலிசம், வேலையில்லாத் திண்டாட்டம் முதலாளித்துவ அமைப்பின் குடும்ப உறவுகளின் சிதைவு மத நிறுவனங்கள் போன்ற பிரச்சனைகளை அலசுகிறார் ரே.

இந்தத் தனது தன்மை குறித்த பிறர் விமர்சனம் பற்றிப் பேசும் போது ஸியாம் பெனிகலுடனான தனது உரையாடலிலும் பிற்பாடு இண்டிப் பெண்டன்ட் பத்திரிகையாளருடனான தனது பேட்டியிலும் தன்னைச் சுற்றியும் நடக்கும் சமகாலப் பிரச்சனைகள் பற்றி நான் அபிப்பிராயம் சொல்லவேண்டும். எனும் நிலைப்பாட்டுக்கு வருகின்றார்.




ஜனசத்ரு எனும் படத்தில் இந்த மாதிரியான வெளிப்படையான விமர்சனம் முன்வைக்கப்படுகின்றது. கடவுள் நம்பிக்கை நிறுவனமயப்படுத்தப்படுகையில் நடக்கும் சமூக விரோதச் செயல்கள் இதில் அலசப்படுகின்றது.

அவரது படங்களில் வரும் பெரும்பாலான பெண்கள் கடவுள் நம்பிக்கை கொண்ட மரபு சார்ந்த பெண்கள்.

ஆயினும் மனிதன் தான் கடவுளை உருவாக்கிறான் என்று மிகத் தீவிரமான கருத்துக் கொண்டிருந்தவர் ரே. தனது இறுதிக் கிரியைகளை மதச் சம்பிரதாயப்படி செய்யக் கூடாது என்று தனது குடும்பத்தவர்களுக்குச் சொல்லியிருந்தார் அவர்.

அவரது இறுதிக் கிரியைகள் எந்த விதச் சடங்குகளும் இன்றி உடல் எரியூட்டப்பட்டதில் தான் நிறைவடைந்தது.

சம கால கலைஞர்கள் அனைவருடனும் மிக நெருக்கமான உறவுகளைக் கொண்டிருந்தார் ரே. மிருனாள்சென் ஸியாம் பெனிகல், கோவிந்த் நிஹ்லானி போன்றவர்களுடன் நெருங்கிய நட்புக் கொண்டிருந்தார்.

அவர்களது படங்களைப் பார்த்து கருத்துச் சொல்வதை ஒரு கடமையாகக் கொண்டிருந்தார். ஸதி எனும் அற்புதமான படத்தை இயக்கியவரும் ரேயின் ஆரண்யர் தினராத்ரி நாயகியுமான அபர்ணாசென் மீது மிகுந்த மரியாதையும் அன்பும் கொண்டிருந்தார். இந்தக் கலைஞர்களின் அபிப்பிராயங்களுக்கு மரியாதை கொடுத்தார்.

உலகில் அளவில் ஜீன்லுக் கோடார்ட், பெடரிகோ பெலின்னி அகிரோ குரகோவா போன்ற மாபெரும் கலைஞர்களால் மதிக்கப் பெற்றவராக இருந்தார். இவர்களை நண்பர்களாகவும் கொண்டிருந்தார்.

ஸியாம் பெனிகல் சொல்லுகிறபடி கலைஞன் என்பதற்கான முழுமையான அர்த்தத்தின்படி ஸத்தியஜித்ரே ஒரு கலைஞன்.

ரே ஒரு மிகச் சிறந்த ஓவியன். குழந்தைகளுக்கான ஓவியப் பத்திரிகையை தொடர்ந்து நடத்திக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மூன்றாம் உலக நாடுகளின் பிரச்சனை. இந்த மனித சோகங்களுக்கும் துயரங்களுக்கும் இடையில் மானுட அன்பு எவ்வாறு ஜீவனுடன் வாழ்கிறது என்பது தான் கலைஞனின் அக்கறை.

பதேர் பாஞ்சாலியில் வரும் அந்த மூதாட்டியைப் பார்த்து எந்த மூன்றாம் உலக மனிதனும் அந்தப் பாட்டியின் முகத்தில் தனது பாட்டியின் அன்பையும் பிடிவாதத்தையும் பெருமிதத்தையும் சோகத்தையுமே காண்பான்.

இதை இலத்தீன் அமெரிக்க ஆபிரிக்க மனிதன் மனித விடுதலைச் சித்தாந்தத்தில் நம்பிக்கை கொண்ட ஐரோப்பிய மனிதன் புரிந்து கொள்வான்.

மணியன் மாதிரி ஐரோப்பிய மூளையும் இந்திய வைதீக பூஞ்சை ஆன்மாவும் பீடித்த ஆட்களால் இந்த உன்னதங்களை ஒருபோது புரிந்து கொள்ள



ஸத்தியஜித்ரேயின் படங்களை சில மாதங்களுக்கு முன்பு ஏறக்குறைய இருபது படங்களை சேனல் நான்கு தொலைக்காட்சியிலும் பி.பி.சி. தொலைக் காட்சியிலும் பார்க்க முடிந்தது. அவரது மிகச் சிறந்த படங்கள் யாவும் இந்தச் சந்தர்ப்பத்தில் திரையிடப்பட்டது. அவரது அபு ஸன்சார் (அப்பு வின் உலகம்) உலகின் திரைப்பட அற்புதங்கள் என்னும் வரிசையில் திரையிடப் பட்டு அதைப்பற்றி விமர்சகர்களின் கலந்துரையாடலும் நிகழ்ந்தது.

பதேர் பாஞ்சாலி, அபராஜிதா, அபுஸன்சார், தீன் கன்யா, கன்ஜன்ஜங்கா, சாருலதா, ஆரண்யார் தின் ராத்ரி, கரே பய்ரே, ஜனஸத்ரு, சத்ரஞ்சே கிலாரி, கம்பனிலிமிடெட், ஆஸானி ஸங்கட் போன்ற இத்தனை படங்களையும் ஒரு சேரப் பார்க்க முடிந்தது.

ஸத்தியஜித்ரே எனும் மனிதனின் முழுமையையும் வெளிக்கொணர்ந்த ஸியாம் பெனிகலின் ஸத்தியஜித்ரே எனும் இரண்டு மணி நேர கலந்துரையாடல் டாகுமெண்டரியையும் காண முடிந்தது.

இந்தப் படங்களைப் பார்த்த சந்தோசத்தில் மீதியிருக்கும் படங்களையும் பார்த்து விடலாம் என்று சில இந்திய வீடியோக் கடைகளுக்கு சென்று விசாரித்தேன். இந்தக் கடைகள் தலைமுறை தலைமுறையாக பிரிட்டனில் இந்தியப்படங்களை விநியோகிக்கும் கடைகள் என்று சொன்னார்கள். நான் விசாரித்த இடங்களிலெல்லாம் எனக்குக் கிடைத்த ஒரே பதில் யாரிந்த ஸத்தியஜித்ரே? Who is this Satyagitray? என்பது தான். இவ்வாறு தான் வாழ்கின்றான் லண்டன் மனிதன். இவ்வாறே வாழ்கின்றான் லண்டன் தமிழனும். ஏழாவது மனிதன் எனும் சர்வதேசிய விருதுபெற்ற தமிழ்படம் ஒன்று வந்தது கூட இங்கிருக்கும் தமிழனுக்கு தெரியவில்லை.

ஸத்தியஜித்ரே பற்றி இந்தியாவிலும் ஐரோப்பிய நாடுகளிலும் நூற்றுக் கணக்கில் புத்தகங்கள் வந்து விட்டன. அவரைப் பற்றி பேசவும் எழுதவும் இன்னும் நூறு நூறு விசயங்கள்.

திரைப்பட ஊடகத்தில் மொழிபற்றி சமகால அரசியல் பற்றி கடவுள் சிந்தனை பற்றி சமகாலக் கலைஞர்கள் பற்றி மிக நுட்பமான கருத்துக்களைக் கொண்டிருந்தவர் ரே.

தனது திரைப்படங்களை வங்காளி மொழியில் தவிர பிற மொழிகளில் தயாரிக்க விரும்பாதவர் ரே. மனித நாகரீகத்தின் ஜீவனுக்கும் கலாச்சாரத்திற்கும் மொழிக்கும் உள்ள உறவைப் பற்றி கருரான முடிவுகளைக் கொண்டிருந்தார். மனித உணர்வுகளை மிக நுட்பமாக வெளிக்கொணரக் கூடியது தாய் மொழியே என்று அவர் கருதினார். ஒரு சின்ன மனிதனைக் கூட மொழியின் அர்த்தத்தின் பாற்பட்டது என்று அவர் கருதினார்.

தனக்குத் தெரியாத ஒரு மொழியில் மனித ஆளுமையின் நுட்பத்துடன் பிரச்சனைகளைத்

VIJAYA GARLANDS

உங்கள் அனைத்து வைபவங்களுக்கும் தேவையான பூ மாலைகளுக்கு

081-543 2943

www.tamilarangam.net



கொண்டிருந்தார். இசைமேதை. பாலமுரளி கிருஸ்ணாவிலிருந்து விலயத்கான் வரை சென்று தனது இசையில் சரண்புகுந்த இசைக்கலைஞன். தனது படங்களுக்கான இசையமைப்பை தானே மேற்கொண்டார். இன்னும் இன்னும் வெளிக் கொணர தனக்குள் இசை உண்டு என்று சொன்னவர். சிறந்த நாட்டிய அமைப்பாளர். இலக்கியவாதி. ஆழமான மனிதாபிமானமும் அழகியலும் இணைந்ததுதான் இவரது படங்கள் என்கிறார் ஸியாம் பெனிகல்.

தாகூருக்கு அடுத்து இவர் மரணத்திற்குப் பின்னும் வங்காள மக்கள் அநாதைகள் ஆகாமல் தப்பித்திருக்கின்றார்கள் என்றால் அதன் காரணம் அன்னை தெரசா இன்னும் உயிரோடு



வீடும் உலகமும் படத்தில்.

இருக்கின்றார் என்பது தான் என்கிறார் ஒரு விமர்சகர். கலைஞன் மட்டுமல்ல முழு மனிதனும் ரே.

ரேயை தனிப்பட்ட முறையில் தனக்குப் பிடித்த படம் என்ன என்று கேட்ட போது சாருலதா என்று சொன்னார்.

ரேயின் வாழ்க்கைச் சரிதத்தை எழுதிய ஆன்ரூ ராபின்சன் எல்லாக் காலத்திற்குமான உலகின் மிகச் சிறந்த இருபது படங்களில் ஒரு படமாகச் சாருலதாதிகழும் என்கிறார். சாருலதா ஒரு குழந்தை இல்லாத பெண்ணின் உலகம் குறித்த படம். வீடும் உலகமும் என்கின்ற மற்றொரு படத்தில் வரும் பெண்ணைப் போலவே குழந்தை இல்லாத ஒரு பெண்ணைப் பற்றிய படம் இது.

இரு படங்களுமே மகாகவி ரவீந்திரநாத் தாகூரின் சிறுகதைகளை அடிப்படையாகக் கொண்ட திரைப்படங்கள். சத்தியஜித்ரேயைப் பற்றி இக்பால் மஜித் எனும் திரைப்பட விமர்சகர் சொல்லும் போது இவ்வாறு சொல்கின்றார். சத்தியஜித்ரேயை விட்டால் அவருக்கு அப்பால் தாகூர், காந்தி, சி.வி. இராமன் போன்றவர்களைத் தவிர வேறு எவரையும் என்னால் குறிப்பிட முடியவில்லை. சத்தியஜித்ரே தாகூரின் மீது கொண்ட தீராத காதலால் தாகூரைப் பற்றி ஒரு டொக்குமெண்டரிப் படம் தயாரித்திருக்கின்றார். அவரது மற்றுமொரு குறிப்பிடக் கூடிய டாக்குமெண டிரி நாட்டிய மேதை பாலசரஸ்வதியைப் பற்றிய பாலா என்னும் படம். இந்தக் கட்டுரையால் அவரின் திரைப்படங்கள் பற்றிய விமர்சனமோ அறிமுகமோ நாம் செய்யவில்லை. அது மிக மிக நுட்பமான உன்னதமானஒரு அனுபவம். அதை பிறிதொரு கட்டுரையில் செய்ய எண்ணுகின்றேன். அவரது மறைவு குறித்த சந்தர்ப்பத்தில் கோவிந்த் நிஹ்லானி சொன்ன வார்த்தைகளுடன் இந்த அஞ்சலிக் கட்டுரையை நிறைவு செய்வோம்.

கோவிந்த் நிஹ்லானி, ஆக்ரோஸ், அர்க்ஸ்த்யா, தமஸ் போன்ற படங்களைத் தந்த இடது சாரி இந்தியசினிமா இயக்குனராவார்.

நிக்லானி சொல்கிறார் ஒரு திரைப்படத் தயாரிப்பாளன், இயக்குனர் என்னும் அளவில் எனது உணர்வின் பரிமாணத்தை இவரது படங்கள் தொடர்ந்து ஆளுமை செய்து வரும். நான் நினைக்கின்றேன் என்னளவில் ரேயின் படங் கள் என்பது அற்புதமான அழகியல் உணர்ச்சிக்கும் கலை ஒருமைக்கும் எடுத்துக் காட்டாக நிற்பவை. ......இவரது மனித நேய தரிசனம் மற்றும் இவரது மிக நுட்பமான இசைத் தன்மை பொருந்திய பணியானது முழுக்கவும் இந்திய சினிமாவில் தனித் தன்மை வாய்ந்த ஒன்றாகும். மேலும் தனித் தன்மை வாய்ந்த விடயம் என்னவென்றால் எந்தப் பிற இந்திய சினிமா இயக்குனரும் இவ்வளவு அற்புதமான திரைப்படச் சாதனைகளை சிருட்டிஸ்ததில்லை.

இவரது படங்கள் உலகம் முழுவதிலும் அங்கீகரிக்கப் படுவதும் அனைத்து நாடுகளிலும் இம்மனிதன் கௌரவிக்கப்படுவதும் சினிமாவானது மொழி மற்றும் கலாச்சார எல்லைகளைத் தாண்டி செல்லவல்லது என்பதற்கும் ஆதாரமாகும். 1921 மே இரண்டாம் நாள் கல்கத்தாவில் பிறந்து வங்காள மறுமலர்ச்சி யுகத்தின் கலைஞனான தாகூரின் சாந்திநிகேதன் சூழலில் வளர்ந்து சர்வதேசிய கலைஞனாக வாழும் சத்தியஜித்ரே என்னும் மாபெரும் யுக மனிதனின் இதயம் 1992 ஏப்பிரல் 23 ஆம் நாள் 5-32 இலிருந்து 5-45 க்குள் சிந்திப்பதை நிறுத்திக் கொண்டது. ரேயிற்கு ஸந்திப்ராய் எனும் ஒரு மகன் உண்டு. அவரும் ஒரு சிறந்த இயக்குனர். ரே மூன்றாம் உலகின் ஜீவனுள்ள கலைஞன்.

www.tamilarangam.net



# புரிந்தும் புரியாத அரசியல் கொலைகளும் புரியாமலேயே இருக்கும் அரச – புலி பேச்சுவார்த்தையும்

ஸ்ரீலங்காவில் அரசியல் நடப்புக்கள் தற்போது சர்வதேச அந்தஸ்திற்கு உயர்ந்துவிட்டன. ஏதாவது ஒரு சர்வதேச ஸ்தாபனம் இவ்விடயத்தை கவனத்திற்கு எடுத்து எமது அரசியல் வாதிகளை கௌரவிக்காத குறையைத் தவிர நாம் மேலை நாடுகளுக்கு எவ்விதத்திலும் குறைந்தவர்களல்ல. முதலீ லாம் உலக மகா யுத்தக்கிற்கு முன்னர் பிரித்தானிய சாம்ராஜ்ஜியக் குடும்பங்களில் மர்மமான முறையில் இடம்பெற்ற கொலைகளைப் போலவும் ஸ்ரீலங்காவிலும் பல அரசியல் கொலைகள் துப்புத் துலக்காத நிலையில் மறைந்து போய்விட்டன.

இதில் முக்கியமாக ஜனாதிபதி பிரேமதாஸவை பின்னணியில் வைத்துப் பேசப்படும் சில கொலைகள் மிகவும் பிரபல்யமானவை. குறிப்பாக இன்னும் எம் மனக்கண் முன் நிற்கும் முன்னை நாள் வாழைத் தோட்ட ஐ.ஆர்.சியும் பிரேமதாஸவின் கைக்கூலியாக இருந்து பின்னர் எதிரியாகி சில நாட்களுக்குள் குண்டுவெடிப்பில் கொல்லப்பட்ட சோமபால, 83 ஜூலைக் கலவரத்தோடு கலவரமாக கொல்லப்பட்ட கொச்சிக்கடை சுதந்திரக்கட்சியின் முக்கிய பிரமுகர் மதாவி அனில் மடம் பிரேமதாஸவை நிக்கருடன் படம் எடுத்த பிரபல பத்திரிகைப் படப்பிடிப்பாளர் விமல் சுரேந்திரா, ஐலண்ட் பத்திரிகை முதலாளியும் பிரேமதாஸவை கட்சிக்குள் எதிர்த்தவருமான உபாலி விஜேவர்த்தன ஜேவிபியினரின் கொலைகளோடு கும்பலோடு கோவிந்தாவாக கொலைசெய்யப்பட்ட ஐ.தே.கட்சியின் செயலாளர் அபயசேகர, தமிழ் வர்த்தகர் உருளைக்கிழங்கு சண்முகம், பிரபல பத்திரி கையாளர் ரிச்சாட் டி. சொய்ஸா, வர்த்தகர் கே. குணரட்ணம், பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜயரட்ண, முப்படைகளின் வடபிராந்தியத் தளபதி டென்சில் கொப்பேக்கடுவ ஆகியோரின் கொலைகள் இன்றுவரை வெற்றிகரமாக மூடிமறைக்கப்பட்டு விட்டன.

உண்மையான கொலையின் பின்னணி முக்கிய சந்தேகநபர்களான ஒருவரும் இக்கொலைகளுக்கு குற்றம் சாட்டப்படவில்லை. ஏனைய நாடுகளில் போலல்லாமல் சில சந்தேக நபர்களையும் சில சாட்சியங்களையும் மூடிமறைப்பதில் அரச பத்திரிகைகள் இதுவரை வெற்றி கண்டுள்ளன.

ஜனாதிபதி பிரேமதாஸவை பின்னணியாக வைத்து பேசப்படும் மேற்குறிப்பிட்டவர்களின் கொலைகளில் முன்நாள் பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜயரத்தினவின் கொலையும் முப்படைத் தளபதி டென்சிலின் கொலையும் மாறுபடுகின்றது. கொழும்பு கசினோக்களின் உரிமையாளர் ஜோ கிம்சை நாடுகடத்துவதில் ரஞ்சன் பிரேமதாஸவுடன் தனிப்பட்ட முறையில் மோதினார். இது நடந்து சில மாதங்களினுள் ரஞ்சன் கொலைசெய்யப்பட்டார். முப்படைத் தளபதி டென்சில் கொப்பேக்கடுவவுக்கு முன்பு சுதந்திரக்கட்சியுடன் தொடர்பு இருந்தாலும் இராணுவத்திற்குள்ளே அவருக்கு அதிக தனிப்பட்ட செல்வாக்கு இருந்தாலும், இவர்களின் கொலைகளுக்கு பிரேமதாஸ தான் காரணம் எனக் கூறப்படுகின்றது. இதற்கும் மேலாக இரு தடவைகள் டென்சில் பிரேமதாஸவைச் சந்தித்தபோது பிரேமதாஸ டென்சிலிடம் அவருக்கு ஏதாவது அரசியல் நோக்கம் இருக்கின்றதா என்று நேரடியாக வினவியிருக்கின்றாராம். இதனை டென்சிலின் பாரியார்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வெளிப்படுத்தியுள்ளார். இது மட்டுமல்லாமல் பிரேமதாஸ கொப்பேக்கடுவவை நேரே வைத்து You are playing politics not fighting away. என்று கூட கண்டித்தாராம். இதனால் பயமடைந்த டென்சில் சென்ற வருட இறுதிக்குள் பதவியிலிருந்து ஓய்வு பெற்று அவுஸ்திரேலியாவில் குடியேறத் திட்டம் இட்டிருந்தாராம். இவையெல்லாம் பிரேமதாஸவின் பதவிப் பனிப்போரின் முதலாவது பக்க கதைகள்.

ரஞ்சன் விஜயரத்ன வின் கொலையை பிரேமதாஸ அனுசரணையுடன் புலிகள் செய்ததாகவும் டென்சிலின் கொலையை பிரேமதாஸவின் அனுசரணையுடன் டக்ளஸ் தேவானந்தா குழுவினர் செய்ததாகவும் பரவலாகப் பேசப்பட்டும் எழுதப்பட்டும் வந்தது.

இதில் மிகவும் வேடிக்கையானதும் குழப்பமானதுமான விடயம் என்ன என்றால் டென்சிலின் கொலையில் நேரடியாகப் பங்கு பற்றியோருக்கு பிரபாகரன் பரிசளித்துக் கௌரவித்ததாக புலிகளின் பத்திரிகைகள் செய்தியைப் பிரசுரித்ததாகும்.

அதேவேளை, பிரித்தானியாவிலிருந்து இக்கொலைகளின் விசாரணைக்கென சென்ற பிரித்தானிய இராணுவ கண்ணிவெடி நிபுணர் திரு வெட் என்பவர் இது அமுக்க வெடியினால் இடம் பெற்ற கொலைகள் அல்ல எனவும் ஏற்கெனவே வாகனத்தினுள் இருந்த குண்டு வெடித்ததினாலேயே இவர்கள் கொல்லப்பட்டுள்ளார்கள் என்றும் கூறியுள்ளார். அது மட்டுமல்லாமல், தான் இந்த விஞ்ஞான பூர்வமான உண்மையை எந்த ஒரு விசாரணைக்குழுவின் முன்னரும் நிரூபிக்கத் தயார் என்றும் சவால் விடுத்துள்ளார். குண்டு வெடித்த கதை ஒருபுறமிருக்க குண்டு வெடித்தபின் இரண்டு வெவ்வேறான படங்கள் பத்திரிகையாளர்களுக்குக் கிடைத்துள்ளன. இது என்ன வேடிக்கை. குண்டு வெடித்தது உண்மை. கொப்பேக்கடுவவுடன் சேர்த்து பல உயர் அதிகாரிகள் இறந்ததும் உண்மை. இது தொடர்பாக வெளியாகிய அறிக்கைகளிலும் படங்களிலும் ஏன் வித்தியாசம். இங்கு என்னதான் நடக்கின்றது. இதில் யார் பொய் சொல்கிறார்கள்? யார் உண்மையை மறைக்கின்றார்கள்? யாருக்குப் பின்னால் யார் மறைகின்றார்கள்? யாரின் கொலையை யார் மறைக்கின்றார்கள்? இது ஏன்......?



நானும் ஒரு இடதுசாரி தான்.
இப்ப பாருங்கோ நாங்கள்
ஏதும் புறப்போகல் வைச்
-சால் எடுபடாது. கனநாள்
யோசிச்சுப் போட்டுத் தான்
யாழ்ப்பாணம் எம்.பியை
மடக்கினானங்கள். அதிலை
பாருங்கோ இந்தான் அதை
பிரேமாட்டை. குடுத்து
லட்சக் கணக்கிலை
காசும் வேண்டிப்
போட்டுதாம் பாவி
மனுசன்....



www.tamilarangam.net



# மீண்டும்,,,, மீண்டும்,,,, அதே பேச்சுவார்த்தை

## எண்ணியதை எண்ணியபடி எழுதுகிறேன்

1992 ஆம் ஆண்டு எவ்வாறான எதிர்பார்ப்புடன் தொடங்கியது என்பதை பலர் மறந்தே போய்விட்டார்கள். இயலுமாயின் 1991 மார்கழிப் பத்திரிகைகளையு ம் 92 தை மாதப் பத்திரிகைகளையும் ஒரு முறை புரட்டிப் பாருங்கள். பிரேமதாஸவின் அரசியல் ஆலோசகர் பிரட்மன் பிரபாகரனைச் சந்திக்க யாழ் செல்கிறார். ஹமீது ஐரோப்பிய நாடொன்றில் புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசுகிறார். என்றெல்லாம் செய்திகள் வெளியாகின.

1993 எப்படி ஆரம்பமாகியிருக்கின்றது?? இதே பல்லவி தான். பாரிசில் உள்ள புலிகளின் பிரதிநிதி திலகரை ஹமீது சந்தித்ததில் புதிய திருப்பம். முன்னேற்றம் என்று பத்திரிகையாளர்கள் கதை விடுகிறார்கள்.

இப்பேச்சுவார்த்தைகளையும் உத்தியோகபூர்வமற்ற சந்திப்புக்களையும் சில அரசியல் விமர்சகர்கள் உண்மையில் நம்புகிறார்களோ இல்லையோ நிச்சயமாக மக்கள் நம்பமாட்டார்கள். இவற்றை நம்புவதற்கு மக்கள் அனைவரும் முட்டாள்கள் அல்ல. பிரேம தாஸ்வுக்கு அடுத்த முறையும் எப்படி பதவியில் இருப்பது என்ற திட்டங்கள் இருக்கின்றதே தவிர தமிழ் பேசும் மக்களின் பிரிச்சனையை தீர்க்கும் திட்டம் எதுவும் இல்லை. பிரேமதாஸ தமிழ்க்குழுக்குழுடன் தமக்குள் வைத்திருக்கும் ஒழிவு மறைவாக உள்ள தொடர்புகள் அவரின் பாதகச் செயல்களைச் சுமப்பதற் கும் பதவியில் வைத்திருப்பதற்கும் அவரினால் மிகவும் தந்திரோபாயமாகப் பாவிக்கப்படுமே தவிர அவை ஒருபோதும் எமது அரசியல் பிரச்சனைக்கு சாதகமாக அமையமாட்டாது.

பிரேமதாஸ வின் முறையிலேயே அச்சொட்டாக ஆட்சி நடாத்திய பிலிபைண்ஸ் முன்னாள் ஜனாதிபதி மார்க்கோஸ், முன்னாள் பாக்கிஸ்தானிய அதிபர் ஷியாகுல் ஹக், ஆகியோருக்கு இறுதியில் என்ன நடந்தது என்பதை தமிழ்க்குழுக்களின் தலைமைகள் மறந்துவிடக்கூடாது. பிரேமதாஸவின் உயர்வு கண்ட அனைவரும் அவரின் அரசியல் மரணத்தில் மரணிக்க நேரிடும் இது நேற்றைய வரலாறு மட்டுமல்ல. நாளையதும் கூட. □

> "மார்க்கோஸ் பதவிக்கு என்ன நடந்தது என்பதை தமிழ்க் குழுக்களின் தலைமைகள் மறந்துவிடக் கூடாது" "இது நேற்றைய வரலாறு மட்டுமல்ல, நாளையதும் கூட."
>
> காயத்ரி [illegible]

www.tamilarangam.net



# ஈழபூமியின் ஏட்டிலிருந்து

தமிழீழ விடுதலைக்கான போராட்டம் வெவ்வேறு கால கட்ட சூழ் நிலைகளில் வெவ்வேறு பட்ட வடிவங்களை எடுத்தும் அதனூடாக ஒரு இடைக்கால தீர்வுக்கு முயற்சி எடுத்ததும் இதுகாறும் போராட்டத்தின் நிமித்தம் ஏற்பட்ட நிகழ்வுகள்.

ஆயுத பலத்தில் அசையாத நம்பிக்கை வைத்திருந்த விடுதலை இயக்கங்கள், ஈழத்தை அடைவதில் எடுத்துக் கொண்ட கொள்கைத் திட்டத் தில் கொண்டிராத உறுதியும் தனிநபர் மீது கொண்ட சினிமாப் பாணியிலான மோகமும் பல இயக்கங்களின் அழிவைத் தடுக்க முடியாமல் போனதற்கான காரணிகளில் சில.

இந்தியாவின் நிலைப்பாட்டை சரியாகப் புரிந்து கொண்ட இயக்கங்கள் கூட இந்தியாவிடம் படிப்படியாக அடிமையானதும் இந்திய உளவுப் பிரிவின் கைங்கரியத்தின் நிமித்தம் வளர்க்கப்பட்ட அத்தனை அமைப்புக்களும் இந்தியாவின் அபிலாஷைகளைப் பூர்த்தி செயத்தும் ஈழப்போராட்டம் எங்கே எப்படிப் போகின்றது என்பதை சாதாரண மக்கள் புரிந்து கொள்ள முடியாதளவிற்கு சிக்கிலாக்கியது.

கொலை, கொள்ளை, சமூக விரோதச் செயல்கள் என இயக்கங்கள் ஒன்றை விட மற்றையது எந்த வகையிலும் சளைத்தது அல்ல என்று நிரூபிக்கும் அளவுக்கு போட்டி போட்டு செயல்பட்டதும் புலிகளின் சக இயக்கங்களின் மீதான அராஜகப் போக்கும் சில அமைப்புக்கள் பிரதான எதிரியிடமே சரணடைய வைத்ததும் அவ்வியக்கங்களுக்கு எதிரான புலிகளின் தாக்குதலும் புலிகளுக்கு எதிரான அவ்வியக்கங்க ளின் செயற்பாடுகளும் பொதுமக்களை யார் பக்கம் நிற்பது என்று தீர்மானிப்பது என்ற பாரிய பிரச்சனையை நோக்கித் தள்ளியது. இது போன்ற இன்னோரன்ன காரணிகள் இடைக்கால தீர்வு ஒன்று அவசியம் என்பதை மக்கள் மனங்களில் எழச் செய்தது.

இந்தியாவின் தலையீடும் புலிகளின் விடாப்பிடியான தாக்குதல்களையும் குறைப்பதற்கு இலங்கை அரசு பேச்சுவார்த்தைக்கு சம்மதம் தெரிவித்தாலும் இலங்கை அரசுக்கு தமிழ் பேசும் மக்களின் பிரச்சனையை உண்மையில் தீர்த்து வைக்கும் நோக்கு என்றுமே இருந்ததில்லை.

அதொதோடு உலக நாடுகளின் உதவி மறுப்பு அச்சுறுத்தலும், ஐ.நா. சபையின் சில அறிக்கைகளும் பேச்சு வார்த்தை நாடகத்தை தொடர்ந்து மேடையேற்ற வேண்டிய அவசியத்தை இலங்கை அரசுக்கு ஏற்படுத்தியது.

இந்த வகையில் தமிழ் பேசும் மக்களின் இறமை பேணப்படும் வகையில் அமையும் எந்த ஒரு தீர்வுக்கும் இலங்கை அரசு இனி வருங்காலங்களிலும் முயற்சி செய்யப் போவதில்லை என்பது எவராலும் உணர்ந்து கொள்ளக்கூடிய சர்வசாதாரண உண்மை. அவ்வாறு எடுக்கும் முயற்சிகள் உலக உதவியைப் பெறும் பொருட்டு காட்டப்படும் கண்துடைப்பாக மட்டுமே அமையும்.

ஜதார்த்த உண்மை இதுவாக இருக்க, பல காலமாக பல முனைகளிலும் இருந்து மாகாண சுயாட்சி முயற்சிகள் முளைத்து செத்துக் கொண்டே இருக்கின்றன. பண்டா செல்வா தொடங்கி ஸ்ரீனிவாசன் வரை ஒப்பந்தங்களும், பேச்சுக்களும், தீர்மானங்களும், பத்திரிகைகளுக்கு தீனிபோட்டவண்ணந்தான் இருக்கின்றன.உலக நாடுகளுக்கு கஸ்ரப்பட்டு பூச்சாண்டி காட்டும் இலங்கை அரசுக்கு இம்மாதிரியான முயற்சிகள் ஊட்டச்சத்தாகவே அமைந்தன.

வடக்கும் கிழக்கும் வரலாற்று ரீதியாகவே பின்னிப்பிணைந்திருக்கும் ஒரு பிரதேசம். பேசும் மொழியிலிருந்து வாழ்வு முறைமை வரை ஒரு பொது உறவு உள்ள தேசம். ஸ்ரீலங்கா அரசின் திட்டமிட்ட குடியேற்றங்களும் கலாச்சார விஸ்தரிப்பும் தமிழ் பேசும் மக்களின் அடிச்சுவடுகளே இல்லாத அளவுக்கு பல இடங்களை ஆக்கியுள்ளமை எவருக்கும் தெரிந்த உண்மை.

திருமலையில், அம்பாறையில், மட்டக்களப்பில் என்று தமிழ் பெயர்கள் அருகி சிங்களமாகிப் போன அத்தனை கிராமங்களும் எமது பாரம்பரிய தேசம். இது இன்னமும் நடந்து கொண்டிருப்பது அண்மைக்கால அரச முயற்சிகளிலிருந்து தெரியவரும் ஒரு விடயம்.

இந்த நிலையில் கிழக்கு தனித்து விடப்படுமாயின் எஞ்சியிருக்கும் இடம் எல்லாம் புத்த விகாரையின் கோபுரம் தெரிவதை யாரும் தடுத்து விட முடியாது.

www.tamilarangam.net



ஆகவே, இந்தத் தீர்வை நோக்கி வைக்கப்பட்ட யோசனைகள் யாவும் பலனளிக்காமல் போனது ஏன்? கொழும்பின் வட்டமேசை தொடங்கி திம்பு வரை தொட்ட பேச்சுக்கள் பேச்சுக்களாகவே போனது ஏன்?

ராஜீவ் பிரபாகரனை மிரட்டி கையொப்பம் போடவைத்ததிலிருந்து பெருமாள்- ராஜீவ் பிணைப்பு வரை எந்த முயற்சியுமே பலனளிக்காமல் போனது ஏன்? மேற்சொன்ன எந்தத் தீர்வும் தமிழ் பேசும் மக்களின் உரிமை பற்றிப் பேச மறுத்தன. மாறாக இந்திய எல்லைப் பாதுகாப்பு பற்றியும் ஸ்ரீ லங்காவின் இன வாத அரசியல் வாதிகளின் நலன்களைப் பேணுவது பற்றியுமே வருத்தம் தெரிவித்தன.

ஆயிரக்கணக்கான உயிர்களைக் கொன்று குவித்து விட்டு, கோடிக்கணக்கான தமிழீழத்தின் வளங்களை நாசமாக்கி விட்டு எஞ்சியிருப்போரை கொன்று குருதி குடிப்பேன் என்று வவுனியா வரை வந்து சவால் விட்டுச் செல்லும் பிரேமதாஸவிடம் தமிழ் பேசும் மக்களின் இறைமையை குழி தோண்டிப் புதைக்கும் வகையில் (அணமையில்) ஒரு தீர்வு ஸ்ரீனிவாசனால் முன்வைக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீனிவாசனால் முன்வைக்கப்பட்ட தீர்வில் உள்ள அம்சங்கள் என்ன? பத்திரிகைகளின் பிரகாரம் இவரின் தீர்வில் ஒன்பது அம்சங்கள் அடங்கியுள்ளன. இவற்றை ஒவ்வொன்றாக அலசுவது இந்தக் கட்டுரையின் நோக்கம் அல்ல. அதில் முக்கியமாக இருக்கும் இரண்டு முக்கிய அம்சங்களைக் குறிப்பிடலாம் என்று நினைக்கின்றேன்.

1) வடக்கும் கிழக்கும் தனித்தனியாக இருக்கும் இரு வேறுபட்ட மாகாணங்கள்.

2) கிழக்கில் குடியேற்றப்பட்ட சிங்களவர்கள் அங்கேயே தொடர்ந்திருப்பர்


கறையான் புத்தெடுக்க பாம்பு ஆட்சி நடத்திய கதைபோலவே உரிமைக்காக போராடுபவர்கள் அமைதியாக இருக்க லண்டனில் இருந்து சென்ற இவருக்கு அவசரமும் அதே நேரம் தமிழ் பேசும் மக்களின் உரிமையைப் பற்றி நிர்ணயிக்கும் அதிகாரமும் எங்கிருந்து கிடைத்தது.

கொழும்பின் பணமும் வசதியும் லண்டனில் வசதியின்றிப் புழுங்கிக் கொண்டிருக்கும் புல்லுருவி இடதுசாரிகள் சிலரின் இரவல் மூளையும் இவரை இலங்கைப்பத்திரிகைகள் படம் போட்டுப் பார்க்கும் அளவுக்கு செய்து விட்டன.

தீர்வு வைக்கும் அளவுக்கு அரசியல் அறிவோ அன்றி அதுதொடர்பான திராணியோ அற்றவர் ஸ்ரீனிவாசன். அவரது கடந்தகால வரலாறு தெரிந்தவர்களுக்குத் தெரியும் தமிழ் பேசும் மக்கள் பற்றிக் கதைக்கக் கூட அருகதை அற்றவர் அவர் என்று. அப்படியாயின் அவருக்கு ஒன்பது அம்சம் எப்படிக் கிடைத்தது. இங்கிருந்து கொழும்புக்குச் சென்ற அவருடன் கூடவே தீர்வும் இங்கிருந்துதான் நகர்ந்திருக்க வேண்டும். எமக்குக் கிடைத்த தகவல் ஒன்றின் பிரகாரம் சமஸ்டி, சமஸ்டி என்று என்று சொல்லி பல்லுவிழும் காலம் வரை லண்டனில் பொழுது போக்கிவிட்ட இடது சாரிகள் என்று சொல்லிக் கொள்ளும் சிலரே இந்த தீர்வின் பின்னணியில் இருப்பவர்கள்.

தமிழ்பேசும் மக்களுக்கு நியாயமான தீர்வு தமிழ் பேசும் மக்கள் வாழும் தேசம் இணைந்திருப்பதிலேயே இருக்கின்றது. அதற்கு அச்சுறுத்தல் ஏற்படுத்த ஸ்ரீனிவாசனால் மட்டுமல்ல வேறு எந்த சக்தியாலும் அதனைச் செய்துவிட முடியாது. கொழும்பின் உதவியோடு அடாவடித்தனம் புரியும் ஸ்ரீனிவாசன் மட்டுமல்ல அவர் போலும் இன்னும் ஆயிரம் பேர் என்றோ ஒரு நாள் தமிழ் பேசும் மக்களுக்கு பதில் சொல்லியாக வேண்டும்.

மார்க்கோசின் வரலாறு உங்களுக்கும் உண்டு என்பதை நினைவில் நிறுத்திக் கொள்ளுங்கள்.



# புதிய தீர்வுகள்

- ஈழவிழி

நாட்டில் யார் யார் எல்லாம் தமிழ் பேசும் மக்களின் பிரச்சனைக்குத் தீர் வு வைப்பது என்று இல்லாமல் போய்விட்டது. தெருவிலே போவோர் வருவோர் எல்லாம் தமிழ் பேசும் மக்களுக்குத் தீர்வு சொல்கிறார்கள். வைக்கின்றார்கள். சுவிஸிலிருந்து சில பேர் சொல்கிறார்கள் இணைப்பாம். லண்டனிலிருந்து சிலர் சொல்கின்றார்கள் சமஷ்டியாம். கொழும்பு கொத்தடிமைகளுக்கு வடக்கும் கிழக்கும் வெவ்வேறாம்.

இவர்கள் எல்லாம் தீர்வு வைக்கும் போது நானும் வைத்தால் எப்படியிருக்கும் என்று எண்ணிப்பார்த்தேன் அதுவும் நல்லதெனவே பட்டது. எனது தீர்வைப் படித்து விட்டு இலங்கை அரசு கிறீஸ்லாந்தில் ஒரு வட்ட மேசை மகாநாட்டைக் கூட்டும் என்று நான் நம்புகின்றேன்.

ஸ்ரீனிவாசனின் யோசனையை அடுத்து வேறு யாரும் முந்திக் கொள்ளாமல் நான் வைக்கும் ஒன்பது அம்சத் திட்டத்தை மக்கள் கவனத்திற்கெடுக்க வேண்டும் என்று தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.




1) வடக்கும் கிழக்கும் இணையக் கூடாது.

2) வடக்கு மாகாணத்திற்கு கண்டியிலும் கிழக்கு மாகாணத்திற்கு வெலிஓயாவிலும் சட்டசபை அமைக்க வேண்டும்.

3) கிழக்கில் குடியேறிய சிங்களவர் உடனடியாக வெளியேறி மூன்று நாட்களின் பின் பலாலியில் குடியேற வேண்டும்.

4) ஸ்ரீனிவாசன் வடக்கிற்கும் திவ்வியநாதன் கிழக்குக்கும் முதலமைச்சராக்கப்பட வேண்டும்.

5) வடக்கும் கிழக்கும் வெசாக் கொண்டாட வேண்டும்.

6) முஸ்லிம் மக்களை அடித்துத் துரத்தி விட்டு மன்னிப்புக் கேட்க வேண்டும்

7) வடக்கிலும் கிழக்கிலும் சிங்களத்தில் மட்டுமே அளவளாவ வேண்டும்.

8) பிரேமாவின் பாரியாருக்கு இரு மாகாணங்களிலும் சிலை எழுப்ப வேண்டும்.

9) சகலரும் சாப்பிட்ட பின்னரே குளிக்க வேண்டும்.

எனது மேற்சொன்ன தீர்வு யோசனையை யாழ் பாராளுமன்ற உறுப்பினரூடாக தெரிவுக் குழுவுக்கு அனுப்பி வைத்துள்ளேன். பத்திரிகைகள் முழுவதும் இனி என்னுடைய படமும் பேருந்தான்.

வாசகர்களுக்கு!

'குறள் தந்த வழி' என்ற பகுதி யோகா அவர்களினால் விவாதத்தை முன்னிட்டு வைக்கப்பட்டுள்ள கட்டுரை. பெண்ணடிமைத் தனத்தை வள்ளுவர் வலியுறுத்தவில்லை என்று கூறும் இவர் கருத்துக்கு நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்கள்? 'பூமி'க்கு எழுதி அனுப்புங்கள் — ஆ-ர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# குறள் தந்த வழி
## விவாதம்

காக்கும் தொழிலைப்புரியும் திருமால் இவ்வுலகை மூன்றடியால் அளந்தான். ஆனால் திருவள்ளுவனோ தனது இரண்டடியால் உலகை அளந் துவிட்டான்.

*'கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த குறல்'*

என்று இடைக்காடர் கூற, இல்லை; இல்லை;

*'அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த குறல்'*

என்று ஔவையார் விவாதம் செய்வது போன்று அமைந்த இந்த இரண்டடிப் பாவம் திருக்குறள், எக்காலத்திற்கும் பொருந்தக்கூடிய வகையிலேயே காணப்படுகிறது.

இல்லறவியல் வாழ்க்கைத் துணை நலம் என்ற அதிகாரத்தில் வருகிறதே ஒரு குறள்.

*'தெய்வம் தொழாஅள் கொழுநன் றொழுதெழு வாள் பெய்யெனப் பெய்யும் மழை'*

இப்படிப்பட்ட பாடல்கள் எல்லாம் இக்காலத்திற்குப் பொருந்துமா? வேலையில்லை, தேவையில்லை திருவள்ளுவர் வாயில்வந்ததையெல்லாம் பாடியிருக்கின்றார், என்று குதர்க்கவாதம் செய்பவர்கள், பலர்வாழும் இக் காலத்தில், அக்குறளின் மூலம் வள்ளுவர் கூற வந்தது என்ன? அக்குறளில் பொதிந்து கிடக்கும் ஆழ்ந்த கருத்துக்களென்ன? என்றெல்லாம் விளங்கிக் கொள்பவர்கள் சிலராகத்தான் இருக்கின்றார்கள்.

சொல்லுக்குசொல் பொருள் கொள்வது இங்கு முக்கியமாக படவில்லை. மூலக்கருத்தை தெளிவுற உணர்ந்து கொள்ளுவது தான் முக்கியம். இங்கு நற்பண்புடைய பெண் ஒருத்தியின் ஆற்றல்தான் வெளிப்படுத்தப்படுகிறது. பெய் என்றால் விஞ்ஞான ரீதியாக மழையை பெய்விக்கும் இக்காலத்தில் நற்பண்பு எதற்காக? காசு இருந்தால் போதுமே இது நவீனகாலம் கால ஓட்டத்திற்கு தக்கபடி நாம் வாழவேண்டும் என்றெல்லாம் ஓடித்திரிந்த பின் முடிவு விவாகரத்தில்தான் போய் நிற்கின்றது. 'அறன்' எனப்பட்ட இவ்வாழ்க்கை நாளடைவில் 'பிறன்' பழிப்பாகிவிடுகிறது. வையத்துள் வாழ்வாங்கு வாழ வேண்டியவர்கள் ஜெயில் கம்பிக்குள்ளேயும், கோட்டு வாசலிலுமாக அலைய நேரிடுகிறது. கணவனை தெய்வமாக மதித்து நடக்கும் பெண்ணுக்கும், அவளுடைய தெய்வீகத் தன்மையை ஏற்று நடக்கும் கணவனுக்கும் எத்துன்பமும் நேரிடாது.

*'இல்லதென் இல்லவள் மாண் பானால் உள்ளதென் இல்லவள் மாணாக் கடை'*

ஒருவன் எல்லாச் செல்வங்களையும் பெற்றவனாக இருந்தாலும் மனைவி நற்பண்புகள் கொண்டவளாக அமையாவிட்டால் எது இருந்தும் இல்லாத நிலையே இவற்றையெல்லாம் கண்கூடாக நாளாந்தம் நாம் பார்க்கக்கூடியதாக உள்ளது. எல்லா வசதிகளும் படைத்த 'றோயல்' குடும்பமானாலும் சரி நற்பண்புகள் அங்கு இல்லாமல் போகும்போது 'வந்து வாய்ந்தாளே'......... அதனால் எல்லாம் சரி என்று எல்லோர் மனங்களையும் சலிக்க வைக்கிறது.

*'தற்காத்துத் தற்கொண்டான் பேணி தகை சான்ற சொற்காத்துச் சோர்விலாள் பெண்'*

பெண் என்பவளுக்கு பொறுப்புக்களை அதிகமாக கொடுத்திருக்கிறார் திருவள்ளவர். கற்பு நெறியில் தன்னைக் கட்டிக்காப்பதுடன், கணவனையும் (நீளக்கயிற்றில் விடாமல்) அவனது பெயரையும், புகழையும் காப்பாற்றி உறுதியோடு வாழ்பவளே பெண் என்று வரைவிலக்கணம் வகுக்கின்றார் வள்ளுவர்.

இவ்வாறு செய்யத் தவறுமிடத்து.

'புகழ் புரிந்த இல்லிலோர்க்கு இல்லை இகழ்வார் முன் காளை போன்ற கம்பீரமானநடை நடை நடப்பதற்கு (நல்ல சப்பாதுக்களை அணிந்தால் வந்துவிடாது) நல்ல மனைவி அமைய வேண்டும். இல்லாவிட்டால் இகழ்ந்து பேசும் பகைவர்களின் முன்னிலையில் கூனிக் குறுகி செயலிழந்து நிற்க வேண்டியதுதான்.

இல்லதென இல்லவள் மாண்பானால் - இல்லாதது என்ன? நற்பண்பு மட்டும் போதுமா? அதனால் சாப்பாடு கிடைக்குமா? வீட்டுக்கு மோட்கேச் வருமா?

கார் வாங்க முடியுமா கம்பீரமாக சுற்றிவர முடியுமா என்ன? என்ற கேள்விகள் எழும்போதுதான்.

*'மனைத்தக்க மாண்புடையள் ஆகித் தற்கொண் டான் வளத்தக்காள் வாழ்க்கைத் துணை'*

என்று தொடக்கத்திலேயே வரையறுத்துவிட்டான் வள்ளுவன் நற்பண்புகளுடன், கணவனுடைய பொருள் வருவாய்க்குத்தக்கபடி, வாழ்க்கை நடத்துகின்றவளே உண்மையான வாழ்க்கைத் துணைவி ஆகின்றாள்.

கணவனை மதித்து, சிறைபோட்டுக் காக்க வையாது. தன்னைத்தானே காத்து வருவாய்க்குத்தக்கபடி செலவுசெய்து, நற்பண்புகளோடு சிறப்பாக இவ்வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும்படி. வள்ளுவர் வகுத்துவைத்த இந்த குறள் வழியானது பழைய புராணம் இல்லை நவீன காலத்திலும் அகன்ற வழியைக்காட்டும் நல்ல வழியாகும்.

— யோகா—

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கலாநிதிகளும் விரிவுரையாளர்களும் என்று கூற கருத்தரங்கென்ன பேருந்து ஆசனங்களா?

கருத்தரங்கு என்பது என்ன? இதற்குரிய விளக்கம் இதுவரை காலமும் எனக்குப் புரியாமல் இருந்தது. அண்மையில் தமிழோசை பத்திரிகையும்தமிழ் அவைக் கலைக் காற்றுக் கழகமும் இணைந்து நடாத்திய இயல் இசை நாடகம் என்ற கருத்தரங்கில் பங்கு கொள்ளும் சந்தர்ப்பம் எனக்கும் கிட்டியதால் என்னால் கருத்தரங்கு என்பதன் அர்த்தத்தைப் புரிந்து கொள்ளக்கூடியதாக இருந்தது.

கருத்தரங்கு என்பதற்கு , இந்தக் கருத்தரங்கின் ஒரு பிரிவுக்கு தலைமை தாங்கிய 'டொக்டர்' ஒருவர் கொடுத்த விளக்கம் இதுதான். கருத்தைச் சொல்லாமல் இருப்பதே கருத்தரங்கு என்பதே அந்த விளக்கம்.

இயல் இசை, நாடகம் என்கின்ற இந்த மூன்று பிரிவுகளும் தமிழ் மக்களின் வாழ்வோடு பின்னிப் பிணைந்திருக்கும் ஒன்று. அந்தக் கலைக்கு நாங்கள் சொந்தக்காரர்களா என்பது முக்கியமல்ல. அந்தக் கலை எங்கள் வாழ் முறையோடு ஒன்றியிருக்கின்றதா என்பதுதான் இங்கு கவனிக் க வேண்டிய விடயம்.

இந்த வகையிலே கூட்டப்பட்டிருக்கும் அந்தக் கருத்தரங்கு புதிய சிந்தனைகளை உள்வாங்கி புதிய பரிமாணத்தை உள்வாங்கும் என்ற நம்பிக் கையோடு தெற்கு லண்டனில் இருந்து வோல்தம்ஸ்ரோ என்ற இடத்தில் நடந்த இந்தக் கருத்தரங்குக்கு சென்றிருந்தேன்.

பல பிரமுகர்கள். எல்லோருமே பேருக்குப் பின்னால் பட்டங்களைக் குவித்துக் கொண்டவர்கள். அல்லது பழமை வெறியின் மயக்கத்தில் இருந்து மீழ முடியாமல் தவிப்பவர்கள். அரங்கு நிறைந்திருக்கும் அளவுக்கு பல பாகங்களிலும் இருந்து ஆவலர்கள் கல்ந்து கொண்டதை அவதானிக்க முடிந்தது. புதிய கண்ணோட்டத்துடன் கருத்தரங்கு ஆரம்பிக் கலாம் என்ற எதிர்பார்ப்புடன் இளைய தலைமுறையும் ஆர்வத்துடன் அமர்ந்திருந்தது கூட அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

கருத்தரங்கு ஆரம்பமானபோது தமிழோசையின் ஆசிரியராக அச்சமயம் இருந்த மாலி என்றழைக்கப்படும் மகாலிங்கம் பழைய பல்லவியிலேயே தனக்குத் தெரிந்த கருநாடக சங்கீதப் பதங்களைப் பாவித்து நடனம் ஆடுவது அப்படி இப்படி என்று கூறி முடித்தபோது கருத்தரங்கு என்ன திசையை நோக்கிச் செல்கின்றது என்பதை சற்று அனுமானிக்க முடிந்தது. பரத நாட்டியம் தொடர்பாக கருத்துக்கள் கூட்டத்தில் அமர்ந்திருந்த படித்தமனிதர்களால் மட்டுமே பெருவாரியாக முன்வைக்கப்பட்டது. பொதுவான கருத்துக்களுக்கு சபையோரிடம் விடப்பட்டபோது பின் கதிரைகளில் அமர்ந்திருந்த பல இளைஞர்கள் (பேருக்குப் பின்னால் பட்டங்கள் இல்லாதவர்களாக் இருக்கலாம் என்று எண்ணுகின்றேன்) தமது கரங்களை உயர்த்தி தங்கள் கருத்துக்களை முன்வைக்க அனுமதி கோரியபோதும் டொக்டர் தலைவருக்கு முன் வரிசையில் அமர்ந்திருந்த கலாநிதிகளும் டொக்டர்களும் எஞ்சினியர்களுமே கண்ணுக்குப் பட்டார்கள். அவர்கள் அரங்கு முறைப்படி தாங்கள் கருத்துக்களை முன்வைக்க அனுமதி கேட்டிருக்கவில்லை. அப்படியிருக்க அவர்களை வரிந்து கட்டிக் கொண்டு டொக்டர் தலைவர் கருத்துப் பரிமாற கேட்டதன் நோக்கம் அவருக்கு மட்டும் தான் வெளிச்சம் என்று எண்ணுகின்றேன்.

பின்னுக்கு அமர்ந்திருந்த இளைஞர்கள் கருத்துச் சொல்ல வேண்டும் என்று அரங்கு விதிகளைச் சுட்டிக் காட்டிய போது அவர்களுக்கு அனுமதி கொடுத்த தலைவர் முற்பது விணாடிகள் உங்கள் கருத்துக்களை வையுங்கள் என்று உத்தரவிட்டார். முற்பது வினாடிகளில் எப்படிக் கருத்துக்கள் வைப் பது? அப்போது தான் நான் விளங்கிக் கொண்டேன் கருத்தரங்கு என்பது கருத்து வைக்காமல் அல்லது கதைக்காமல் வைப்பது என்று.

இங்கே கவனத்திற்கு எடுக்க வேண்டிய ஒரு வி டயம் என்ன என்றால் முற்போக்குச் சிந்தனை உள்ள தமது நாடகங்களில் எந்தச் சக்திகளுக்கும் கட்டுப்படாமல் தனித் தன்மையோடு கருத்துக்களை வெளியிடும் தமிழ் அவை கலைக் காற்றுக்கழகம் எப்படி இப்படிப் பட்டவர்களை கருத்தரங்குகளுக்கு தலைமை தாங்க வைத்தது என்பது எனக்கு சந்தேகம் தரும் ஒரு நிகழ்வாகிறது.

ஒட்டு மொத்தத்தில் நடந்து முடிந்த கருத்தரங்கில் திருமதி நிர்மலா அவர்களால் முன்வைக்கப்பட்ட கருத்துக்களும் சபையில் இருந்து முன்வைக்கப்பட்ட சில இளைய தலைமுறையின் கருத்துக்களும் பயண் மிக்கதாய் இருந்தாலும் அவற்றை ஏற்றுப் பரிசிலிக்கும் அளவுக்கு அந்தச் சபையில் பங்கு பற்றிய எந்த வித்துவான்களுக்கும் அக்கறை இருக்கவில்லை.

பரத நாட்டியத்திற்கு ஒரு தனித் தன்மை இருக்கின்றது. அந்த தனித் தன் மையில் இருந்து விலக முடியாது என்று பழம் தலைகள் சில அறுதியாகத் தெரிவித்த போது வித்துவான்கள் மௌனமாக இருந்து

www.tamilarangam.net



விட்டார்கள். கலை வடிவம் என்பது, இலக்கிய உருவாக்கம் என்பது அந்தச் சமூகத்தின் உள் வெளிப் புறங்களை அப்படியே படம் பிடித்துக் காட்டுவது போல இருக்கவேண்டும். ஒரு சமூகத்தின் பிரச்சனைகளை அந்தச் சமூகத்தின் நடைமுறை சிக்கல்களை உள்வாங்க மறுக்கும் எந்தக் கலையும் கலையல்ல. அவை வெறும் செயலற்ற யந்திரங்களாகவே காட்சி தர முடியும்.

கண்ணனுக்காக காத்திருக்கும் ராதையும், வெட்கத்தால் தலை குனியும் பேதையும் பத்துப் பெண்களுடன் படுத்துக் கிடந்து விட்டு வரும் ஒருவனுக் காக ஏங்குவதும் போன்ற தோரணையில் அமைந்த பரத நாட்டியம் எங்களுக்குத் தேவையை? சீதனத்தின் கொடுமையில் சிக்கித் தவிக்கின்ற லட்சக்கணக்கான பெண்களை, சாதி வெறியிலே துண்டாடப்பட்டிருக்கும் சமூகத்தை, பிரதேச வெறியிலே பிளவு பட்டிருக்கும் ஒரு தேசத்தைப் பற்றிச் சிந்திக்க மறுக்கும் இந்தக் கலைகளின் அவசியம் எமக்கெதற்கு.

கலை என்பது நட்ட கருங்கல் போல காட்சி தருவதற்கு என்றால் எமக்கு எதற்கு அந்தக் கருங்கல்லை. அந்தக் கருங்கல் ஆளாக மாற வேண்டும். அழகு ஓவியங்களாக மாறவேண்டும். அப்படி காலத்தின் தேவையை பூர்த்தி செய்யாமல் காலத்தின் தேவையோடு இணைந்து செல்லாமல் தனித்து நின்று போராட நினைக்கும் பித்துப் பிடித்த கலைஞர்களின் கலையால் எமது தேசத்திற்கு என்ன பிரயோசனம்.

அந்தக் கருத்தரங்கிலே பல பின்வாங்கு இளைஞர்களால் முன் வைக்கப்பட்ட கருத்துக்கள் ஏன் அன்றைய வித்துவான்களினால் செவியேறாமல் போனது? இதற்கு பின்னணியில் இருந்த காரணிகள் என்ன?

கருநாடக சங்கீதம் என்ற சாயத்தைப் பூசிக்கொண்டு சமூகத்திலை தமக் கென ஒரு அந்தஸ்தை நிலைநாட்டிக் கொண்ட முனையும் வித்துவான்கள், தமிழிலே பாட்டுக்களைச் சொல்லிக் கொடுக்க தயக்கம் காட்டுகின்றார்கள்.

இயல், இசை, நாடகம் என்ற மூன்றும் எமது வாழ்வு முறையோடு ஒன்றிப்போனவை. அவை எமது வாழ்வு முறையைப் பிரதிபலிக்கத் தவறினால் அவை கலைகளாக மட்டுமே இருக்குமே தவிர மக்களால் மதிக்கப்படுகின் ற கலைகளாக ஒருபோதும் இருக்கப் போவதில்லை.

= பாவண்ரு

# அகதிகள் போவது நிச்சயம்?

அகதிகள் திருப்பி அனுப்பப்படுவார்கள் என்று கேள்வியுற்றதும் அந்த விடயத்தை பல அகதி அன்பர்களிடம் கூறி இதற்கு நாம் ஏதாவது செய்தாலொழிய அனுப்பப்படுவதை தடுத்து நிறுத்துவது கடினம் என்று கூறினோம். இவங்கள் அனுப்பமாட்டாங்கள் உங்களின் கூட்டங்களுக்கு எல்லாம் வர முடியாது என்று பிரித்தானிய அரசில் அபார நம்பிக்கை வைத்திருக்கும் எமது தமிழ் நெஞ்சங்கள் பல கூறிவிட்டன.

ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான ஆணைக்குழு இலங்கையில் கொழும்பும் அதனைச் சார்ந்த பகுதிகளும் இலங்கையின் மத்திய பகுதிகளும் (அனுராதபுரம், வவுனியா) தமிழர்கள் மீளக் குடியமர்த்த பாதுகாப்பான இடங்கள் என்று கூறி அகதிகளை திருப்பி அனுப்பும் போது அவர்களைக் கண்காணிக்கும் பொறுப்பையும் அது ஏற்றுள்ளது.

இதன் படி ஒரு குறிப்பிட்ட தொகையினர் (சில அறிக்கைகளின் பிரகாரம் சுவிஸ்லாந்திலிருந்து.) திருப்பி அனுப்பப்படுவார்கள். அவர்களுக்கு கொழும்பிலோ அன்றி பாதுகாப்பான இடம் என்று அகதிகளுக்கான அணைக் குழுவினால் அடையாளம் காணப்பட்டுள்ள ஏனைய இலங்கையின் பாகங்களிலோ ஒரு முகாம் அமைக்கப்பட்டு அங்கு இவர்கள் பாதுகாப்பா வைக்கப்படுவார்கள். இந்த முயற்சி வெற்றிகரமாக அமையும் சந்தர்ப்பத்தில் அங்கிருக்கும் முழு அகதிகளும் அதனைத் தொடந்து ஏனைய ஐரோப்பிய சமூகத்தில் இருக்கும் நாடுகளும் அகதிகளைத் திருப்பி அனுப்பும்.

இவ்வாறு திருப்பி அனுப்ப எடுக்கும் முயற்சிகளை முன்னேற்பாடாக தடுத்து நிறுத்த நாம் முயற்சிக்காது விட்டால் லண்டனில் இருக்கும் அகதிகள் விரைவில் நாட்டுக்குப் போவதை யாரும் தடுத்து விட முடியாது. பிரச்சனை முடியும் வரை இங்கு தங்கியிருக்க நாம் போராட வேண்டியது எங்கள் கடமை. திருப்பி அனுப்பாது என்று உதாசீனமாக நடப்போமானால் நாளை பிரித்தானியா எடுக்கும் எந்த நடவடிக்கைகளையும் நாம் தடுத்து நிறுத்த முடியாதவர்களாகி விடுவோம்.

ஈழபூமி

www.tamilarangam.net



# மனிதமும் மருத்துவமும்



- பாஸ்கரதாஸ்

விஞ்ஞானம் தொழில் முறைகள் நாளுக்கு நாள் வேகமாக முன்னேறிக்கொண்டுருக்கின்றன அதே வேகத்தில் மருத்துவத்துறையும் விரிவடைகிறது புதிய புதிய நோய்கள் கண்டுபிடிக்கப்படுகின்றன அதற்கேற்ற மருந்துகளைக் கண்டுபிடிப்பதில் அல்லும் பகலும் ஆராய்ச்சியாளர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள் அதே வேளை வருமுன் காத்தல் (Prevention is better than cure) முயற்சியில் மக்களிடையே நோய் களைப்பற்றிய அறிவை வளர்த்து (Health education) அதன் மூலம் நோய்க்கான காரணிகளைத் தவிர்க்கவும் மருத்துவர்கள் முயன்று கொண்டிருக்கிறார்கள் இத்தகைய அறிவை எம்மக்களிடையேயும் ஏற்படுத்த 'ஈழபூமி' மேற் கொள்ளும் முயற்ச்சியின் ஆரம்பந்தான் இப்பகுதியின் தோற்றம்.

காரில் போய்க்கொண்டிருக்கிறோம் சடுதியாக அது இயங்க மறுக்கிறது காரை விட்டு இறங்கி பொனட்டைத்திறக்கின்றோம் Spot check மின்சாரக் கோளாறு ஒயில் போதுமானளவு இருக்கிறதா? ரேடியேட்டரில் தண்ணீர் குறைந்துள்ளதா? புளக் பொயின்றஸ் 'டிஸ்ரிபியூட்டர் காப்' ஒகே?.... பிழையைச் சரி செய்கிறோம் பிரயாணம் தொடர்கிறது எம்மால் திருத்த முடியாத பழுதிற்கு மெக்கானிக்கிடம் செல்கிறோம் ஏற்பட்ட பிழையை விளக்கமாகக்கூறுகிறோம் இலகுவாக விரைவாக சரிசெய்து விடுகிறார் இந்த காரை நாம் சில வருடங்களாக உபயோகப்படுத்துகிறோம் அதனால் அதற்கு ஏற்படும் ஏற்படக்கூடிய பிழைகளை விரைவாகக் கண்டுபிடிக்கக் கூடியதாக இருக்கிறது அதே போன்று நாம் வாழ்க்கையில் எத்தனை நாள் Brake down ஆகியிருக்கின்றோம் எமக்கு நாமே Spot chcck செய்ய முயன்றிருக்கின்றோமா? டொக்டரிடம் சென்று எமது பிரச்சினைகளை

தெளிவாகச் சுருக்கமாகச் சொல்ல முடிகிறதா? அவர் கூறுவதை பூரணமாகப் புரிந்து கொள்ளுகிறோமா? எப்படி? ஆமா? இல்லையா? ... Not Sure? பரவாயில்லை இவற்றைப்பற்றித்தான் நாமும் கொஞ்சம் அறிய முயல்வோமே.

எமது உடல் ஒரு தொழிற்சாலை நடமாடும் தொழிற்சலை உணர்ச்சிகள் ஆசா பாசங்கள் உள்ள ஒரு நடமாடும் தொழிற்சாலை அதன் தொழில் முறைகளைக் கொண்டு உடல் தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது ஒரு மனித உடலின் அடிப்படைச் செயற்பாடுகள்.

1. உணவு உட்கொள்ளல் - உணவுச்சமிபாடு Food intake - Digestion
2. சுவாசித்தல் - வாயுப்பரிமாற்றம் Respiration Gas exchange
3. கழிவகற்றல்- Elimination
4. உணவு வாயுக்கள், கனிவுப் பொருட்கள் முதலியவற்றை உரிய இடங்களுதக்குக் கடத்தல் (Circulation)
5. உணரவைத்தல் (Sensation) இயங்கவைத்தல் முதலான செய்திகளைக்கடத் தல்
6. இனத்தைப் பெருக்குதல் Reproductive stystem
7. உடலிலுள்ள இயக்கங்களின் சமநிலையைப் பேணுதல்
8. உடலுக்குத் தோற்றத்தையும், உறுதியையும், இயக்கத்துக்கு அமைப்பையும் கொடுப்பது (Locomotor system)
9. இத்தோடு கண் காது தோல் போன்ற உணர்வு வாங்கும் அங்கங்கள் முதலியவற்றைக் கொண்டது தான் எமது உடல்

இத்தொகுதிகளின் இயக்கங்கள் ஒழுங்காக நடைபெறும் போது சுகமாக இருக்கிறோம். இயக்கங்களுக்கு இடையூறு ஏற்படும் போது நோய் வாய்ப்படைகிறோம்.

## நோய்க்கான காரணிகள்

1. பிறப்பிலிருந்து வருவது (Congential Disorelers)
2. நோய்க்கிருமிகளின் ஊடுருவலால் ஏற்படுவது (Infections)
3. உடலகங்கங்கங்களின் தேய்வுகளால் உருவாகுவது (Wear and tear)
4. சில சந்தர்ப்பங்களில் தொகுதிகளின் அமைப்புகள் இன்னோரன்ன காரணங்களால் உறுதியிழக்கின்றன (Degenerative disorden)
5. உடல் காயப்படுத்தப்படுவதால் (Teaumative) உருவாகுவது
6. உடல் இழையங்களில் ஏற்படும் அசாதாரண வளர்ச்சியால் உருவாவது (Cancerrous)
7. ஹோர்மோன் சமநிலையில் ஏற்படும் மாற்றங்களால் உருவாவது

இதன் அடிப்படையில் ஒவ்வொரு தொகுதிகளில் ஏற்படும், அன்றாட வாழ்க்கையில் சந்திக்கும் நோய்களைப்பற்றிய விபரங்களை இயன்றவரை, தொகுத்தளிக்க எதிர்வரும் ஏடுகளில் முயல்கிறோம். இதற்கான ஆக்கமான கருத்துக்களை வாசகர்களிடமிருந்து எதிர்பார்க்கிறோம். அதே வேளை உங்களுக்கு ஏற்படும் சந்தேகங்களை நிவர்த்தி செய்ய நிபுணர்களை அணுகி கருத்துக்களைப் பெற இயன்றவரை எத்தனிப்போம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அவரவர் வீடு

---- சுகுமாரன்

ஒரே வீட்டில் வாழ்கிறோம் நாம்
ஒரே வீட்டில் வாழ்ந்தாலும்
ஒரே வீட்டிலும்
ஒவ்வரு வீட்டில் வாழ்கிறோம்

என் வீட்டுச் சுவரில் உன் படம்
எனினும்
உன்னுடையதல்ல எனது வீடு
உன் வீட்டுச் சுவரில் என் படம்
எனினும்
என்னுடையதல்ல உனது வீடு

எனக்கு என் வீடு
உனக்கு உன் வீடு

என் வீட்டுக் கதவு வழியாக
நீ நுழைய முடிவதில்லை
உன் வீட்டுக் கதவு வழியாக
நானும்

நாம் வீடுகளில் வாழ்கிறோமா?
அல்லது
வீடுகளின் காவலில் இருக்கிறோமா?
எனக்குப் புரியவில்லை
உனக்கு?

நன்றி காலம்

அழைப்பிதழ்கள், துண்டுப்பிரசுரங்கள், பத்திரிகைகள், புத்தகங்கள், சுவரொட்டிகள்
**Letterheads - Business Cards - Brochures - Com-Slips**
**Typesetting - Artwork - Design - Multilingual**
*** Special Discount for regular orders ***
*** 10% Off on orders over £100 * *20% Off - over £300 ***
**Reduced Price for Business Pack**

நியூ ரெக் அச்சகம் NEWTEC printers

24 மணி நேர சேவைக்கு தொடர்பு கொள்ளுங்கள்
☎ 081-871 2734
Fax: 081-877 3837
Unit 2, Glenville Mews, Kimber Road, London SW18 4NL.

www.tamilarangam.net

We Welcome! to

The No1 Srilankan Supermarket in Britain

WHY YOU PAY MORE? WHEN WE SELL CHEAP?





இலங்கை, இந்திய, பங்களாதேஷ்

உணவுப்பொருட்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள்!

இவை மட்டுமா

Halal Meat * Chicken!

தமிழ், சிங்களப் பாடல்கள் Audio, CD க்களில்!

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் வெளிவரும் இலங்கைத் தமிழ், சிங்கள, ஆங்கில வாராந்தப் பத்திரிகைகள் அன்று மாலையில்!

Fresh Vegetables Available Daily!

இவை அனைத்தையும் ஓரே இடத்தில் சிறந்த தரத்தில் நியாய விலையில் பெற்றுக்கொள்ள

Spiceway

Wimbledon

21 - 23 Kingston Road, London SW19

(Near South Wimbledon Tube Station)

Tel: 081-540 5526. Fax 081-544 0697

Open 7 Days a Week 9.00 am to 9.00pm

www.tamilarangam.net


# RANJIT & COMPANY

## SOLICITORS

107 B Hoe Street,
Walthamstow
London E17 4SA .
☎ 081 521 5757
Fax 081 521 5757

1st Floor,
176, Mitcham Road,
London SW17 9NJ.
☎ 081 767 9717
Fax 081 767 9684

IMMIGRATION
ACCIDENT CLAIM
LICENSING
HOUSING PROBLEM
LANDLORD & TENANT
DISPUTE

Free hold | Leasehold

Competitive Quotes By Phone
7 Days. A Week

MORTGAGE ARREARS
HARASSMENTS
TENANCY AGREEMENT
NOTICE TO QUIT
MATRIMONIAL &
INJUNCTION WORK

Conveyancing
Residential & Commercial
Fixed Fee

**REPRESENTATION AT POLICE STATION IS COVERED BY LEGAL AID ALL CRIMINAL COURT WORK UNDER TAKEN**



Weddings - Birthdays & ALL Your Special Events

☹ Video Filming??? ☹

**Contact Expo On**

**081 672 6629**

EXPO ☞ *Quality With Experts*

***Video Filming***
***Computer Image Processing ***
***Computer Graphics***
***Video Special Effects***
***Video Editing***
***Audio Dubbing***